www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11

திருப்பூர், கணியூர் - 642203

தேர்வு எண்:

# காலாண்டுத் தேர்வு - 2024

காலஅளவு: 3.00 மணிநேரம்

## தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14 x 1 = 14

1. ஒப்புரவு என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது உ) செல்வமுடையது

2. 9 அடிச்சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்.
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறு நூறு

3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப் போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத் தொகை

4. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர்
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

5. தொல்காப்பியம் குறிப்பிடும் "புலன்" என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த நூல்.
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பள்ளு ஈ) ஐங்குறு நூறு

6. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகை என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யபடுகிறபோது உறைந்து போன பனிக் கட்டியை போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிக உணர்த்தும் கருத்து
அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சு மொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
இ) எழுத்து மொழியை விட பேச்சு மொழி எளிமையானது
ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும், எழுத்துமொழி எளிமையானது.

7. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
அ) ஏதிலிக் குருவிகள் - 1. மரபுக் கவிதை
ஆ) திருமலை முருகன் பள்ளு - 2. சிறுகதை
இ) யானை டாக்டர் - 3. குறும் புதினம்
ஈ) ஐங்குறு நூறு - 4. புதுக்கவிதை

8. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2) அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
3) வாடிவாசல் - இ) குறுந்தொகை
4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச் சிந்து
i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, இ, அ iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

9. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் _____ என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

10. நிழல் போல தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை? அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

11. நேரொன்றிய ஆசிரியத்தளை எனப்படுவது
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

12. "புல்லின் இதழ்கள்" என்ற நூலின் ஆசிரியர்
அ) வால்ட் விட்மன் ஆ) பாப்லோ நெருடா இ) மல்லார்மே ஈ) இந்திரன்

13. பகுபத உறுப்புக்களுள் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி ஆ) பகுதி, விகுதி, இடைநிலை
இ) பகுதி ஈ) பகுதி, விகுதி, சந்தி, சாரியை

14. பாயிரம் இல்லது _____ அன்றே அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

### பகுதி - II பிரிவு - I

ஏதேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
16. தமிழர்கள் புகழ்,பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக?
18. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

#### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 2 = 4

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டு தருக.

#### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
(அ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
(கனை, கணை)


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க 1. அறிவில்லாதவன் 2. அறிவில் ஆதவன்.
26. கலைச் சொல் தருக. 1) Document 2) Value Education
27. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பொதுச் சிறப்பு (அல்லது) ஆ) இயைவதாயினும்
29. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) அலர்ந்து (அல்லது) ஆ) நெருங்கின.
30. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

## பகுதி - III பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. சு.வில்வரத்திமை பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. 'மறுவிலாத அரசென இருந்த மாநகர்' உவமையைப் பொருளுடன் விளக்குக.
34. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.

## பிரிவு - 2


எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. 'என்னுயிர் தமிழ் மொழி என் பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நம் கருத்தை எழுதுக?
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் குறிப்பு வரைக.
38. ஐந்து வேளாண்மை மந்திரங்கள்" யாவை?

## பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
மகள் நிலை உரைத்தல் துறையைச் சான்றுடன் விளக்குக.
41. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்தி சொற்களை உருவாக்குக.




42. இலக்கிய நயம் பாராட்டுக.
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்ந்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர். - பாரதியார்
43. தமிழாக்கம் தருக.
1. A picture is worth a thousand words.
2. Roads were made for journeys not destinations
3. Education is the most powerful weapon, which you can use to change the world
4. knowledge rules the world.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 3 x 6 = 18

44. அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' இக்கூற்றை முப்பால் வழி விளக்குக (அல்லது)
ஆ) தலைவியின் இல்லறப் பாங்கிளைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?
45. அ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக. (அல்லது)
ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.
46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக (அல்லது)
ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி- V

47. அ) அம்ம வாழி" எனத் தொடங்கும் குறுந்தொகை பாடலை அடி பிறழாமல் எழுதுக 4 + 2 = 6
ஆ) "செயல்' என முடியும் குறளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com